**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்துார், வேலுார் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 214/2021</u>**

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபாின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | வயது | 52 |
| த.பெ.(அ)க.பெ. | கண்ணன் | தொழில் | எலக்ட்ரிசியன் |
| ஊர் | பெரியகரம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்துார் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்துார் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் பெரியகரம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் எலக்ட்ரிசியனாக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி பாபுவை தெரியும். அவரது அப்பா ஜெயபால். அவர்கள் எனது துாரத்து உறவினர்கள். 26.04.2018 இரவு 10.00 மணிக்கு எனது சகலை அண்ணாதுரையின் நிலத்தில் போர்வெல் போட்டுக்கொண்டிருந்தோம். அண்ணாதுரையின் மனைவி பானுமதி எனது மனைவியின் சகோதரி என்பதால் நானும், என் மனைவியின் மற்றொரு சகோதரி சாலாவும் போர்வெல் போடும்போது உதவியாக இருக்கலாம் என்று அங்கு சென்றோம். போர்வெல் ஒரு தோப்பில் போட்டுக்கொண்டிருந்தோம். அந்த இடத்தில் ஒரு சிறிய குறுக்கு வழி உள்ளது. அந்த வழியில் சிறிதளவு மறைத்த வண்ணம் போர்வெல் வண்டி இருந்தது. நாங்கள் அன்றைய தினம் காலையிலிருந்தே போர்வெல் போட்டுக்கொண்டிருந்தோம்.

(2) அப்போது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தினை கொண்டு வந்து போர்வெல் லாரியின் அருகே நிறுத்திவிட்டு யாருடா தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி வழியின் குறுக்கே வண்டியை நிறுத்தி போர்வெல் போடுவது என்று கேட்டார். மேலும் போர்வெல் வண்டியை இயக்கியவரிடம் சென்று உடனே அங்கிருந்து வண்டியை எடுக்கும்படி சண்டையிட்டார். ஏற்கனவே 960 அடி போர் போட்ட நிலையில் இருந்ததால் சிறிதுநேரம் கழித்து முடித்துவிடுவோம் நீங்கள் ஒதுங்கி செல்லுங்கள் என்று நான் ஆஜர் எதிரியிடம் சென்று கூறினேன். காலையிலிருந்து நிறைய பேர் ஒதுங்கிதான் செல்கிறார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் நீ யாருடா தேவிடியா பையா என்று

அசிங்கமாக திட்டி என்னை ஒதுங்கி போக சொல்வது என்று கூறி என் கண்ணத்தில் ஓங்கி அறைந்துவிட்டார். மேலும் என்னை வலது காலின் மீது எட்டி உதைத்துவிட்டார். நான் அப்படியே கீழே விழுந்துவிட்டேன்.

(3) எனக்கு வலது பின்பக்க பிட்டத்தில் அடிப்பட்டுவிட்டது. ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன்பிறகு 10 நிமிடம் கழித்து ஆஜர் எதிரி அவரது அப்பா ஜெயபாலை நாங்கள் போர்வெல் போட்டுக்கொண்டிருந்த இடத்திற்கு அழைத்து வந்தார். நான் ஆஜர் எதிரியின் அப்பாவிடம் கூறினேன். அவரை எனக்கு சிறிய வயது முதலே தெரியும் என்பதால் இதுதான் நடந்தது அண்ணா என்று கூறினேன். ஆனால் அப்போதும் ஆஜர் எதிரி மீண்டும் வந்து எனது கண்ணத்தில் மாறி மாறி பலமுறை அறைந்தார். நான் ஆஜர் எதிரியின் கையை பிடித்து தடுத்த போதும் எனது முக்கின் மீது ஓங்கி குத்திவிட்டார்.

(4) அதற்கு ஆஜர் எதிரியுடன் வந்த அவரது அப்பா என் மகன் அடித்தால் கையை பிடித்து தடுக்க கூடாது என்று கூறி ஜெயபால் எனது இரண்டு கைககளையும் பிடித்து முறுக்கி எனக்கு பின்பக்கமாக கைகளை கொண்டு சென்று பிடித்து கொண்டு ஜெயபால் என்னை பலமுறை கைகளால் குத்தியும் உதைத்தும் அடித்ததில் எனக்கு உள்காயம் ஏற்பட்டது. கையில் எனக்கு சவ்வு கிழிந்துவிட்டது. என்னை அடித்துக்கொண்டிருக்கும்போதே என் மனைவியின் சகோதரி சாலா ஜெயபாலிடம் சென்று அவரை அடிக்காதீர்கள் என்று தடுத்தார். அப்போது ஆஜர் எதிரி சாலாவின் மார்பின் மீதும், வயிற்றின் மீதும், பிறப்புறுப்பின் மீதும் காலால் உதைத்துவிட்டார்.

(5) ஜெயபால் கொல்லுடா இவனை என்று ஆஜர் எதிரியை பார்த்து கூறினார். இவனை வெட்டாமல் விடாதே, வீட்டிற்கும் சென்றால் கூட விடாதே என்று கூறினார். நான் தப்பித்து சிறிது தூரம் ஓடிவிட்டேன். ஏரிக்கரையின் வழியாக குறுக்கே சென்று எனது வீட்டிற்கு சென்று பயத்தில் கதவை தாழிட்டு கொண்டேன். சண்டையை அறிந்து அண்ணாதுரையின் மருமகன் வீட்டிற்கு வந்து என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். அப்போது இரவு 1.00 மணி இருக்கும். போலீஸார் என்னை மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சமயம் வந்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் போட்டேன். **புகார் வாக்குமுலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(6) நான் ஆஜர் எதிரி மற்றும் அவரது அப்பா ஜெயபால் இருவர் மீதும் தான் நான் புகார்வாக்குமுலம் அளித்தேன். வழக்கு பதிவு செய்தபின்பு எனக்கு 15.07.2018 இருக்கலாம் நீதிமன்றத்திலிருந்து கடிதம் வந்தது. அந்த கடிதத்தில் என்னை தாக்கிய சம்பவத்தில் பாபு என்பவர் மட்டும் ஈடுபட்டதாகவும், ஜெயபால் என்பவர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் மீதான எனது ஆட்சேபனையை தெரிவிக்கும்படி கூறியிருந்தார்கள். நான் எனது ஆட்சேபனை மனுவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். நான் அதன் பிறகு பலமுறை நீதிமன்றத்திற்கும் வந்தேன். கொரானா காலத்தில் என்னால் வரமுடியவில்லை. அதன்பிறகு எனது ஆட்சேபனை மனு என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.